வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 16 செவ்வாய்க்கிழமை (29-03-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 122

வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

# தென்மாகாணத்தில் எதிரணி ஆதரவாளர்களுக்கு எதிராக பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது!

## அடுத்த தேர்தல்களில் தோல்வியை தவிர்க்க அரச தரப்பு மிரட்டல் யுக்தி

கொழும்பு, மார்ச் 29

தென்மாகாணத் தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைந்ததை அடுத்து அங்கு எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கு எதிராக பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

அடுத்து வரும் தேர்தல்களில் இத்தகைய தோல்வி ஏற்படாமல் தவிர்ப்பதற்காக - வழமையான பாணியில் - மிரட்டல் யுக்தியை, அரச தரப்பினர் நாடியிருப்பதாகவும் கருதப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களை பொலிஸார் தாக்கி வருவதாக, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பொலிஸ் மா அதிபருக்கு முறையிட்டிருக்கிறார்.

தேர்தலை அடுத்து அங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும் இரவு நேர ஊரடங்கைப் பயன்படுத்தி ஐ. தே. க. ஆதரவாளர்களும் பொலிஸாரும் சேர்ந்து இத்தாக்குதலை நடத்தி வருவதாக அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இத்தாக்குதலை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், தென் மாகாண மக்கள் கோபாவேசமடைந்து பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டார்கள் என்றும் —

இதனால் நிலைவரம் கட்டுக் கடங்காமல் போய்விடும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா பொலிஸ் மா அதிபரை எச்சரித்துள்ளார்.

தேர்தலை அடுத்து சில கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

எதிரணி சார்பாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டவர்கள், வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் முகவர்களாக செயற்பட்டவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வீடுகளைத் தேடி இரவு நேரங்களில் வரும் இனம் தெரியாத குழுவினர் அவர்களைத் தாக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் வரும் அரச தரப்பினரே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதாக செய்தியாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

ஆனந்த குலரத்ன, நந்த மித்திர சொய்ஸா போன்ற அரச தரப்பு எம். பிகளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விஜேதுங்காவுக்கு எதிராக பெரிய அளவில் இயக்கம்

#### சிறிமாவோ அறிவிப்பு

விஜேதுங்க அரசுக்கு எதிராக பெரிய அளவிலான இயக்கம் ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நடத்த விருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவை அடுத்து நாம் மேற்கொள்ளும் நடவடிக்கையாக இது இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கைவிடும்படி கோரியும் —

தேர்தல்களை உடனடியாக நடத்தும்படி கோரியும் இந்த எதிர்ப்பியக்கம் நடத்தப்படும் என்று அவர் சண்டே ஐலண்ட் வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (இ-9)

## முச்சந்தி முரளி



உவர் தொண்டா... மதில் மேல் பூனை மாதிரித்தான் நிக்கிறார் போலை......!

## ஜனாதிபதி தேர்தலில் இம்முறையும் குமார்?

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இன வேட்பாளராக தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் போட்டியிட விரும்புவதாக தெரிகிறது என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

அமைச்சர் தொண்டமானை சிறுபான்மை இன வேட்பாளராக போட்டியிட வைக்க தமிழ் வட்டாரங்கள் சில இன்னும் முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தொண்டமான் இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார்.

சிறுபான்மை இனமக்களின் வாக்குகளும் காலமும் விரயமாக்கப்படக் கூடாது என்றும் —

சிறுபான்மையினரின் நலன்களை நிறைவேற்றக் கூடிய பெரும்பான்மை இன வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றும் தொண்டமான் கூறியுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-9)

## அரசுடன் பேரம் பேசும் நிலையில் தொண்டமான்!

கொழும்பு, மார்ச் 29

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவைத் தொடர்ந்து, நாட்டு அரசியலில் இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் பேரம்பேசும் பலமான நிலைக்கு மீண்டும் வந்திருக்கிறார்.

தோல்வியைத் தொடர்ந்து சிக்கலுக்குள்ளாகியிருக்கும் ஐ. தே. கவின் தற்போதைய நிலையை தனக்கு ஆதரவாக பயன்படுத்திக்கொள்ளத் தாம் விரும்பவில்லை என்று தெரிவித்த திரு. தொண்டமான், சந்திப்புக்கு திகதி ஒதுக்கும்படி ஜனாதிபதியைப் பல முறை தான் கேட்டும் அவர் இன்னும் தன்னைச் சந்திக்கவில்லை என்றார். ஆனால் தனது உதவியாளராக செல்லசாமியை ஜனாதிபதி சந்தித்துப் பேசி வருகிறார் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியுடனான உறவு திருப்திகரமானதாக இல்லை என்று ஒப்புக்கொண்ட தொண்டமான் —

ஒரு நண்பனுக்கே வாக்களிக்க விரும்புகின்றேன். அந்த நண்பனுக்கு நான் தேவைப்படாவிடின் நான் ஒரு எதிரியைத் தேடிக் கண்டுபிடித்து அவருக்கு வாக்களிப்பேன். காரணம் எனது வாக்கை நான் விரயமாக்க விரும்பவில்லை என்றும் சொன்னார். (உ-எ-9)

## சந்திரிகாவுடன் தொண்டா சந்திப்பு

கொழும்பு, மார்ச் 29

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவை இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் சந்தித்துப் பேசினார்.

நாட்டின் நிலைவரம் பற்றி அவருடன் பேசியதாக தொண்டமான் பின்னர் தெரிவித்தார்

தமது நிலைப்பாட்டை சந்திரிகா தெரிந்து கொண்டார் என்று கூறிய அவர் தமது ஆதரவை சந்திரிகா கோரவில்லை என்றும் கூறினார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவது சந்திரிகாவின் இறுதி நோக்கமாக இருக்கலாம். ஆனால் அது பற்றி பாரதூரமாக விவாதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# வடக்குத் தாக்குதலுக்கு முன்னர் இராணுவ கட்டமைப்பில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 29

ஜெனரல் தரத்தில் உள்ள இராணுவத் தளபதியையும், லெப்டினன்ட் ஜெனரல் தரத்திலான இராணுவத் தலைமை அதிகாரியையும் கொண்டதாக நாட்டின் இராணுவக் கட்டமைப்பை மாற்றியமைக்கும்படி அரசாங்கத்துக்கு பலமாகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

செல்வாக்குமிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இச்சிபார்சைச் செய்திருப்பதாக "சண்டே ஐலண்ட்" வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இப்போது இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தரத்திலும், இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் தரத்திலும் உள்ளனர்.

வடபகுதி மீதான உத்தேச கூட்டுப்படைத் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்பதாக இக்கட்டமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்று, இம்மாற்றத்தைச் சிபார்சு செய்துள்ள பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சிபார்சின்படி —

மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தில் தற்போது ஒரு லெப்டினன்ட் ஜெனரலும் மூன்று மேஜர் ஜெனரல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரை முந்தி புலிகள் தாக்கலாம்

கொழும்பு, மார்ச் 29

பெரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகின்றது என்று "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

வட பகுதியில் பாதுகாப்புப் படைகள் உத்தேச தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்பதாக விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஆரம்பிக்கப்படும் சாத்தியம் இருப்பதாக இராணுவ அதிகாரிகள் இடமாக நம்புவதாகவும் "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ-9)

### நரோமா இன்று வந்து திரும்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருகோணமலையில் இருந்து ஒருதொகுதி பயணிகளுடன் 'நரோமா' கப்பல் இன்று காலை காங்கேசன் துறைக்கு வரும் என்றும்—

திருகோணமலை செல்வதற்காக பருத்தித்துறையில் இருந்து செல்லும் பயணிகளை ஏற்றிக்கொண்டு அக்கப்பல் இன்று மாலை திருகோணமலைக்கு செல்லும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் திருகோணமலைக்கு செல்ல கடந்த 24 ஆம் திகதி செயலகத்தில் பெயர்களை பதிவு செய்தவர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன் பருத்தித்துறையில் சமுகமளிக்குமாறு செயலகம் கேட்டுள்ளது. (உ-8-173)

### நவம்பர் மாத பதிவுத் தபால்கள் மார்ச்சில் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 29

கடந்த நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதியில் கொழும்பில் தேங்கிக் கிடந்த பதிவுத் தபால்கள் அனைத்தும் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட அந்தத் தபால்கள் நேற்று முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (உ-5-162)

### கிளாலி-பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 29

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-5)

### யாழ் பல்கலை ஊழியர் நாளை வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நாளை புதன் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

மத்திய வங்கி ஓய்வூதியத் திட்ட முறையை தமக்கு அறிமுகப்படுத்துமாறும் —

சம்பள அதிகரிப்பு வழங்குமாறும் கோரியே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயற்குழு அதன் தலைவர் திரு. ச. க. தனேந்திரன் தலைமையில் நேற்றுக் கூடி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என முடிவு எடுத்தது.

வேலை நிறுத்தம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் குறித்து பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கூடி ஆராயவுள்ளனர்.

இதேவேளை —

ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் இன்று கூடி ஆராயவுள்ளனர். [உ-5]

# சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழருக்கும் புலிகளே காப்பரண்!

கொழும்பு, மார்ச் 29

இன்றைய நிலையில்—

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு விடுதலைப் புலிகளே ஒரு காப்பரணாக இருக்கின்றார்கள்.

## குமார் பகிரங்கக் கடிதம்

'காரணம், தீர்வுயோசனைகள் எவற்றையும் முன்வைக்காது, ஜனநாயக தமிழ்க் கட்சிகளுடன் ஒரு தீர்வைக் காணாத நிலையில் — அந்த ஜனநாயகத் தமிழ்க் கட்சிகளை சிங்கள அரசியல் தலைமைத்துவம் வெற்றிகரமாக ஓரங்கட்டிவிட்டதே ஆகும்.'

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்கு எழுதிய பகிரங்கக் கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சிங்களப் பகுதிகளில் தமிழ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### 7 பவள் வாகனங்கள் மே மாதம் வருகின்றன

கொழும்பு, மார்ச் 29

தென் ஆபிரிக்காவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஏழு பவள் கவச வாகனங்களையும் எதிர்வரும் மே மாதத்தில் இலங்கைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது என கொழும்பு பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

இந்த வாகனங்களை பார்வையிட சென்ற பாதுகாப்புத் துறை நிபுணர்கள் கடந்த வாரம் கொழும்பு திரும்பி விட்டனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போதும் பூநகரி நாகதேவன்துறைத் தாக்குதலின் போதும் புலிகளால் ஐந்து பவள் கவச வாகனங்கள் நிர்மூலமாக்கப்பட்டதை அடுத்தே இந்த அவசரக் கொள்வனவு நடப்பதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8-9)

### ஏப்ரல் புத்தாண்டுக்கு முன்னர் 5 பிக்குகளுடன் யாழ் வர ஆரியரத்னா விருப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பௌத்த பிக்குகள் ஐவருடன் யாழ்ப்பாணம் வருவதற்கு சர்வோதய அமைப்புத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா விடுதலைப் புலிகளிடம் அனுமதியை கோரியுள்ளதாக தெரியவந்தது.

ஏப்ரல் புத்தாண்டுக்கு முன் இவர் யாழ்ப்பாணம் வர விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். [illegible] (உ-8)

# கருத்துக் கணிப்புத் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 29

வடக்கு-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவது குறித்து கிழக்கில் கருத்துக் கணிப்பை நடத்துவது பற்றிய தனது திட்டத்தில் அரசு தற்போது அக்கறை காட்டவில்லை என்று தெரிகிறது.

தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பற்றி விமர்சனக் கட்டுரையில் "சண்டே ரைம்ஸின்" அரசியல் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

கருத்துக் கணிப்பு நடத்துவது பற்றிய முடிவு தமிழீழ விடுதலைப் புலிகளின் மனோபாவத்தில்தான் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கருத்துக் கணிப்பு நடத்தப்படுவதை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் எதிர்த்துள்ளன. கிழக்கில் உள்ள முஸ்லிம்களும் இது விஷயத்தில் ஒரு முடிவுக்கு வராதவர்களாக இருக்கிறார்கள்.

எப்படியாயினும்—

கிழக்கில் உள்ள முஸ்லிம்களில் பெரும்பாலானோர் இணைப்புக்கு எதிரானவர்கள் என்பதால் கருத்துக்கணிப்பை முந்தியோ, பிந்தியோ நடத்தியே ஆகவேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருக்கிறது.

—இப்படி சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

(இ-எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹோட்டலுக்குரிய Restur-ant) சாப்பாட்டு மேசைகள் ஏழு, பேக்கரிக்கு மா குழைக்க பாவிக்கும் மேசை விற்பனைக்குண்டு. சி. நாதன், 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (7165)

### தேவை

தமிழ் தட்டெழுத்தாளர் (Typist) தேவை. 30-03-94 புதன் காலை 8-00 — 1-00 மணிக்கு நேரில்வரவும். Bond, யாழ்ப்பாணம். [7164]

அச்சுக்கூட கட்டர் (Press Cutter) தேவை; விலை விபரங்களும் தொடர்புகொள்ளவும். ஞானம் ஆட்ஸ், சித்திர பவன், சங்கானை. [30122]

அச்சுக்கோப்பாளர் தேவை. இருபாலாரும் நேரில் வந்து சந்திக்கலாம். தானியங்கி மெஷின் மைண்டரும் தேவை. 37, கே. கே. எஸ். வீதி, கன்னாகம். (7089)

### தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். G. V. Kanesalinkam, இல. 298, K. K. S. Road Jaffna. (29943)

19-3-94 சாவகச்சேரி சந்தையில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி சந்தையில் உள்ள ''விமலாஸ்'' கடை உரிமையாளர் நவரத்தினம் என்பவரிடம் ஒப்படைக்கவும். [7162]

### காணவில்லை

சிவப்பு நிறமுடைய பெண் நாய் சங்கிலியுடன் காணவில்லை. பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். நடராசா, குலேந்திரன் வீதி (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட். (30119)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடன் கிடைக்கும். த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாலடிச் சந்தி) (30053)

## 200 பேர் கைது

கொழும்பு, மார்ச் 29

தென்மாகாணத்தில் தேர்தல் முடிந்த மறுதினமான வெள்ளியன்று ஊரடங்கு உத்தரவை மீறியதாக 200 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-2)

## கரபந்தாட்ட போட்டி

வட்டுக்கோட்டை மார்ச் 29

சாவகச்சேரி கல்விக் கோட்ட விளையாட்டுக் குழுவினரால் கோட்ட மட்டத்தில் நடத்தப்படும் கரபந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4. 30 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மாக வித்தியாலய அணியும் பண்ணாகம் மெய்கண்டான் மாக வித்தியாலய அணியும் போட்டியிடவுள்ளன.

இப்போட்டியில் 19வயது 17வயது பிரிவுகள் இரண்டிலும் மேற்படி பாடசாலைகள் இரண்டும் மாத்திரமே கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க-161)

## அன்னை பூபதி நினைவு சிரமதான நிகழ்வு

அன்னை பூபதியின் நினைவு நாட்களை ஒட்டி நடைபெற்று வரும் சிரமதான நிகழ்வுகளில் இன்று மந்துவில் றோ. க. த. பாடசாலை துப்புரவு செய்யப்படும். (க)


புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம் (வ து)

## பதவி வெற்றிடம்

### லொறிச் சாரதி

கல்வித் தகைமை:
5ஆம் வகுப்புச் சித்தி.
லொறிச் சாரதிக்கான உத்தரவுப் பத்திரமும், 4 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 18 — 40

சம்பளத் திட்டம்:
805 — 1260 / 25 X 7 — 35 X 8 (இதர படிகளும்)

பிணை ரொக்கம்: 5 000

விண்ணப்பங்கள் யாவும் 18 - 04 - 1994 ஆம் திகதிக்கு முன் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ கூ. சங்கம்,
201/1, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[சி-7621]



## நில அளவையாளராவதற்கான பயிற்சி

அரச நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம் வழங்கவுள்ளது: இப் பயிற்சியினைப் பெறவிரும்பும் கீழ்க் காணும் தகுதி உடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்;

1. கல்வித் தகைமை:
   - (i) க. பொ. த. (உயர்தரம்) கணிதம் உட்பட 3 பாடங்களில் சித்தி - அல்லது
   - (ii) க பொ. த. (சாதாரண தரம்) கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் திறமைச்சித்தி- அல்லது
   - (iii) நில அளவைத் துறையில் குறைந்தது 3 வருடம் அனுபவமும் க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி - அல்லது
   - (iv) தொழில் நுட்பக் கல்லூரியில் படவரைஞர் சான்றிதழ் உள்ள க. பொ. த. (சா/த) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி - அல்லது
   - (v) மேற்கண்ட தகைமைகளுக்கு உயர்வான தராதரம் உடையவர்கள்
2. வயதெல்லை:
   17 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.
3. பயிற்சிக் காலம்; 6 மாதம்
4. விசேட பயிற்சி:
   6 மாத பயிற்சி முடிவில் திறமையான முதல் 30 பேருக்கு தொடர்ந்து 6 மாதம் விசேட பயிற்சி அளிக்கப்படும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: 20 — 04 — 1994
6. நேர்முகப் பரீட்சை:
   தகுதியுடையவர்கள் எனத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப் பரீட்சை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
7. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்புற மேல் மூலையில் ''நில அளவைப் பயிற்சி'' என்று குறிப்பிடவும்.
8. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது பூரண சுய விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**இயக்குநர் (பயிற்சிப் பிரிவு),**
தமிழீழ நில அளவையாளர்
ஒருங்கிணைப்புக் கழகம்,
ஈழநாதம் இல. 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி 7616]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### நாகநாதபிள்ளை செல்லத்துரை

(1ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

தோற்றம்: 25 — 04 — 1917 மறைவு: 27 — 02 — 1994

பாசமிகு தலைவனாய், தந்தையாய், மாமனாய் தாத்தாவாய் திகழ்ந்த அன்புத் தெய்வமே! நீங்கள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் வாழ்வீர்கள் ஐயா!

எமது தந்தையார் 27-2-94 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து சகல உதவிகளையும் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் இன்று (29-3-94) செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறும். இவ் வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

-குடும்பத்தினர்.

இல. 33, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி நகரசபை இளைப்பாறிய செயலாளர்

உயர்திரு

# தளையசிங்கம் நவரத்தினராசா அவர்களுக்கு

## நகரசபை ஊழியர் நலன்புரி சங்கம் நடத்தும் சேவை நலம் பாராட்டு விழா

### அரச அதிபர் ஆசிச் செய்தி

உள்ளூராட்சிச் சேவையில் பலகாலம் கடமையாற்றி இறுதியாக சாவகச்சேரி நகரசபையின் செயலாளராகவும், விசேட ஆணையாளராகவும் பணிபுரிந்து ஓய்வு பெறும் திரு. த. நவரத்தினராசா அவர்கள் தான் கடமையாற்றிய உள்ளூராட்சி சபைகளிலெல்லாம், தன்னால் முடிந்தளவுக்கு தன்னலமின்றி உழைத்திருக்கிறார்.

குறிப்பாக சாவகச்சேரி பகுதி அபிவிருத்தி திட்டங்களிலும், வேலைகளிலும் மிகமிக அக்கறையுடன் செயல்பட்டிருக்கிறார். இப்பணிகளில் பல்வேறு வழிகளில் இவர் முன்னுதாரணமாக திகழ்ந்திருக்கிறார். இப்படியானவர்கள் இளைப்பாறிச் செல்லும் பொழுது பெரியதொரு இடைவெளி ஏற்படுகின்றதென்பது உண்மை தான்.

எனினும் பலகாலம் அயராது சேவையாற்றியவர்களுக்கு ஓய்வும் அவசியமென்பதால் அவர் இளைப்பாறி அமைதியுடன் நீண்டகாலம் வாழ்ந்து சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டு மேன்மேலும் நாட்டுக்கு பணிபுரிய வேண்டி வாழ்த்துகிறேன்.

எல்லாம் வல்ல இறைவனும் நீடூழி வாழ அருள்புரிவானாக.

கா. மாணிக்கவசகர்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம் மாவட்டம்.



த. நவரத்தினராசா

### சேவைக்காலம்

1952—தற்காலிக எழுதுநர்
1954—நிரந்தர எழுதுநர்
1954—பொது எழுதுநர்
1964—நிறைவேற்று எழுதுநர் தரம் II
1971—எழுதுநர் வகுப்புI
1978—அதிசிறப்பு எழுதுநர் சேவை
1980—உள்ளூராட்சி நிர்வாக சேவை தரம்II வகு II
1990—உள்ளூராட்சி நிர்வாக சேவை வகு II தரம்I
1992—இலங்கை நிர்வாக சேவை வகு II தரம்I

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆசி

உள்ளூராட்சி மன்றங்கள் தான் ஒரு உண்மையான சனநாயக நாட்டின் கிராம மட்டச் சனநாயக அமைப்புக்களாகும். நீண்ட காலமாக எங்கள் பகுதிகளில் இவ்வமைப்புக்கள் அரச அதிகாரிகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டுள்ளன; அதனால் அவையும் திணைக்களங்களாக மெல்ல மாறி வருகின்றன. இப் புறச் சூழலில் வைத்தே திரு. த. நவரத்தினராசாவின் சேவையை நாம் மதிப்பீடு செய்வது பொருத்தமானதாகும்.

சாவகச்சேரி நகர சபையின் முழு நிர்வாகத்திற்கும் அவர் நெடுங்காலமாகப் பொறுப்பாக இருந்த போதிலும் உள்ளூராட்சி மன்றப் பண்பையும் வடிவமைப்பையும் மாற்றாது வரியிறுப்பாளர்களின் பூரண ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் பெற்று, அந்த நிறுவனம் மக்களுடையது என்ற கருத்து நிலைக்கும் வகையில் சிறப்புடன் நிர்வகித்து வந்தார்.

சுருங்கக் கூறின் திரு நவரத்தினராசா, உள்ளூராட்சி மன்றச் சிறந்த நிர்வாகத்தின் உயர்ந்த குறியீடாகும்.

அவரின் சேவை ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

சுந்தரம் டிவகலாலா,

பிரதேசஉள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்.

### மங்காத ஒளிவிளக்கு

வள்ளுவரின் குறள்வழி வாழ்ந்து சாவகச்சேரி நகரசபையில் இருபத்தாறு வருடங்கள் சேவையாற்றி நகர்ப் பகுதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட முன்னாள் செயலாளர் உயர்திரு த. நவரத்தினராசா அவர்களின் நற்சேவையைப் பாராட்டி கௌரவிப்பதில் நகரசபை ஊழியர் நலன்புரி சங்கம் பெருமையடைகிறது.

சபையில் கடமையாற்றும் ஊழியர்களின் சுகதுக்க நிகழ்வுகளுக்கு உதவும் நோக்கில் இச் சங்கத்தினை உருவாக்கி தொடர்ச்சியாக பதினைந்து வருடங்கள் தலைவராக இருந்து ஆற்றிய உயரிய பணியினை சங்க அங்கத்தவர்கள் எளிதில் மறக்க முடியாது.

அவரும் அவரது குடும்பத்தாரும் நல்ல சுகத்துடன் சகல செல்வங்களும் பெற்று, இன்னும் பல ஆண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

நகரசபை ஊழியர்,
நலன்புரிசங்கம், சாவகச்சேரி.

### பொதுப்பணிகள் மேலும் சிறக்கட்டும்

உள்ளூராட்சிச் சேவையில் எழுதுநராகத் தமது சேவையை ஆரம்பித்து பல உள்ளூராட்சி மன்றங்களில் தமது சேவையைத் திறம்பட ஆற்றி இறுதியில் தொடர்ச்சியாக 26ஆண்டு காலம் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் செயலாளராகவும், விசேட ஆணையாளராகவும் பணிபுரிந்து தற்பொழுது இளைப்பாறியுள்ள திரு தளையசிங்கம் நவரத்தினராசா அவர்களை உள்ளூராட்சிச் சேவையின் ஒளிவிளக்கு என்று கூறினால் அது மிகையாகாது.

அவருடைய காலத்தில் அவருடைய சிறந்த வழிநடத்தல்கள், ஆலோசனைகள் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு மட்டுமல்ல, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்கும் வியாபித்திருந்தது என்றால் அதனை மறக்க முடியாது.

பிரதிபலனை எதிர்பார்க்காது தமது கடமையைச் சிறப்பாக ஆற்றி உத்தியோகத்தர்களிடையேயும், மக்களிடையேயும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்ட உள்ளூராட்சி சேவையின் ஒளிவிளக்கான திரு த. நவரத்தினராசாவையும் அவரது குடும்பத்தினரையும் சிறப்புடன் மேலும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி, அவரது பொதுப்பணி மேலும் சிறப்படைய மனமார வாழ்த்துகிறோம்.

விசேட ஆணையாளர்
செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
பச்சிலைப்பள்ளிப்
பிரதேச சபை.

### கடமையே கண்ணாக மதித்து வாழ்ந்தவர்

கடமையே கண்ணென மதித்து சேவையாற்றிய சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் செயலாளர் திரு. த. நவரத்தினராசா அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

பலனை எதிர்பாராமல் கடமை செய்யும் ஒருவன் மக்களாலும் மற்றவர்களாலும் மதிக்கப்படுவான் என்ற தாரகமந்திரத்திற்கு உதாரணமாக திரு. நவரத்தினராசா திகழ்ந்தார் என்றால் மறுக்கமுடியாது.

சாவகச்சேரி நகரப்பகுதி மக்களை தமது சொந்தக்காரர்களாக மதித்து செயல்பட்டு சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள திரு. நவரத்தினராசா பல்நெடுங்காலம் வாழ்ந்து தொடர்ந்தும் நகர்ப் பகுதி வளர்ச்சியில் செயலாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்
சாவகச்சேரி பிரதேசசபையும்,
பிரதேச செயலர்
தென்மராட்சியும்

### மக்கள் மனதிலே நிறைந்த இடம்

'மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு ஏற்ப வாழ்ந்து கடமை என்ற பதத்துடன் மட்டுப்படுத்தாமல் சேவை என்ற பெரு நோக்கம் கொண்டு சாவகச்சேரி வாழ் மக்களுக்கு உள்ளூராட்சிச் சேவையின் பணிகளை திறம்பட ஆற்றியதோடல்லாமல் அதற்கும் மேலாக சமய கல்வி கலாசார சமூகத் தொண்டுகளிலும் தம்மை ஓய்வு நேரமெல்லாம் ஈடுபடுத்தி மக்களின் மனதில் நிறைந்த இடத்தைப் பிடித்துக்கொண்டவரும் உள்ளூராட்சிச் சேவையின் தந்தை என்று போற்றப்படத்தக்கவருமான திரு. த நவரத்தினராசாவும் அவர் குடும்பமும் பல்லாண்டு காலம் பல சிறப்புகளும் பெற்று வாழ அவர் வணங்கும் பெருங்குளப் பிள்ளையார் திருவருள் பாலிக்கஇறைஞ்சிநிற்கிறேன்.

சி நடராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

(விளம்பர இல சி-7607)

## குருநகரில் கரை ஒதுங்கிய சடலம்

குருநகர், மார்ச் 29

கால்கள் கட்டப்பட்ட நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நேற்றுக் காலை கரை ஒதுங்கியது.

அந்தச் சடலம் றெக்ளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த பேதுறு ஞானப்பிரகாசம் அல்லது ஐயாத்துரை [வயது 71] என்பவருடையது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

காவல்துறையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அங்கு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது.

மதுபோதையில் கால்களை அவரே கட்டிக்கொண்டு கடலில் குதித்து தற்கொலை செய்து [illegible] (அ-81-18)

### சிங்கள பிரதேச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்கும் இரண்டு அரண்களில் ஒன்றாக விடுதலைப் புலிகள் உள்ளனர்.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பரவியுள்ள விடுதலைப் புலிகள் பற்றிய அச்சமும் சர்வதேச சமூகத்தின் உன்னிப்பான கண்காணிப்பும் தான் சிங்களவர்களில் ஒரு பகுதியினர் தமிழர்களைக் கொல்வதைத் தடுத்துள்ளன.

'எந்த முட்டாளும் துப்பாக்கியைப் பாவிக்கலாம். ஆனால் சாமர்த்தியமுள்ள ஒருவருக்குத் தான் துப்பாக்கியை எப்போது எங்கு பாவிப்பது என்பது தெரியும்'—என்று மாசேதுங் கூறியதாக நான் படித்துள்ளேன்.

இலங்கையின் எதிர்காலத்தைப் பொறுத்த வரையில், கணக்கிடும் நாள் வந்துள்ளதாக நான் எண்ணுகின்றேன். [illegible] உண்மை, நேர்மையுடன் கூறுகிறேன் உண்மைத் தமிழன் எவனும் இலங்கையில் இருந்து தமிழ்ப்போராளித்துவத்தை அழிக்க அனுமதிக்கமாட்டான்.

இன்று நாம் தமிழ்ப்போராளித்துவம் பற்றிப் பேசுகிறோம் என்றால் அது விடுதலைப் புலிகள் பற்றி மட்டுமே தவிர வேறு எவரும் பற்றியது அல்ல. பல காரணங்களுக்காக தமிழ்ப்போராளித்துவத்தை இலங்கையில் இருந்து அழிக்கவே முடியாது.

அரை நூற்றாண்டுக்கு மேலாக இருந்துவரும் தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் வரை இலங்கையில் இருந்து தமிழ்ப்போராளித்துவத்தை அழித்து விடலாம் என்று கனவு காணாதீர்கள்.

தமிழ் இளைஞர்கள் இலட்சியத்துக்காக இரத்தம் சிந்திச் சண்டையிடுகிறார்கள். பணத்துக்காக அவர்கள் தியாகம் செய்யவில்லை என்று குமார் பொன்னம்பலம் தமது நீண்ட கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

## இன்று

சங்கானை கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2; 30 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். [த]

## 'வெளிச்சம்' இன்று வருகிறது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய வெளியீடான ''வெளிச்சம்'' மாதாந்த இதழ் இன்று வெளி வருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி வழங்கிய செய்தி, பிரம்மஞானியின் 'மனிதனும் வரலாறும்' கட்டுரைத் தொடர், கவிதை, சிறுகதை, நெடுங்காணல் உட்பட பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்


### சமாதானத்தின் முக்கிய தேவைகள்

அரசாங்கம் சமாதானக் கதவுகளை திறந்தால் அனைவரும் நிம்மதியாக வாழமுடியும், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்—

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வே காணப்பட வேண்டும்—

இவ்வாறு தெரிவித்திருப்பவர் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் திரு. லயனல் பெர்னாண்டோ.

அரசாங்கம் தனது தூதுக் குழுவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்த வேண்டும்—

நாட்டின் இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளான நாம் இருசாராருமே காரணமும், பொறுப்பும் ஆவோம். இன்றுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக சகலரும் ஒன்றிணைந்த அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்—

இவ்வாறு நாடாளுமன்றத்தில் வைத்து ஆலோசனை கூறியிருப்பவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் திரு. கே. பி. இரத்நாயக்கா. இவர் ஸ்ரீ. ல. சு. கட்சி அரசில் அமைச்சராகவும் விளங்கியவர்.

இவர்களைப் போலவே, மேலும் பல சிங்களப் பிரமுகர்கள் தமிழர் பிரச்சினையை யுத்தத்தினால் வெல்லமுடியாது என்பதனை உணர்ந்துள்ளனர். ஆனால் ஆட்சியில் இருப்பவர்களுக்கும், பேரினவாத மாயையில் மூழ்கியிருப்பவர்களுக்கும் அதனை உணர்த்தினால் மட்டுமே முட்டுக்கட்டை எதுவும் இல்லாமல் சமாதானத்தை அடைய வாய்ப்பு உண்டாகும்.

தமிழர் பிரச்சினையும், அதன் காரணமாக நாட்டு நிலைமையும் இந்தளவு மோசமடைந்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே காரணம் என்பதனை திரு. இரத்நாயக்கா நாடாளுமன்றில் வெளிப்படையாகக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனை இரண்டு பக்கங்களிலும் உள்ள அரசியல்வாதிகள் உணர்ந்து, திருந்தி, அரசியலில் மறுபிறவி எடுக்க வேண்டும். சமாதானம் விரைந்து வருவதற்கு அதுவும் ஓர் அவசியத் தேவையாகும்.

தெற்கின் பிரதான கட்சிகள் இரண்டையும் சேர்ந்த அரசியல்வாதிகள் பேரினவாத சக்திகளுக்கு அஞ்சி அரசியல் நடத்துவதையும், அவற்றின் செல்வாக்குக்கு உட்படுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமாதானத்தை அடைவதற்கு அதுவும் முக்கிய தேவையாகும்.

சமாதானத்தை அடைவதற்கான முன்முயற்சிகளில் ஈடுபடுவோரைப் பேரினவாத சக்திகள் தூற்றுகின்றன; பயமுறுத்தவும் செய்கின்றன. சிங்களப் பத்திரிகை ஒன்றில் பேராசிரியர் நளின் டி. சில்வா என்ற முன்னணிப் பேரினவாதி எழுதிய கட்டுரையைப் படித்தால் அது புரியும். யாழ்ப்பாணத்துக்கு சமாதான — நல்லெண்ண — தூதுக்குழுக்களாக வந்தவர்களை, வரவேற்பும் தெரிவித்திருப்பவர்களைக் கண்டித்தது மட்டுமல்ல, இன்டலும் செய்திருக்கிறார்.

தென்மாகாண சபைத் தேர்தலோடு பேரினவாதத்தை நிராகரிக்கும் போக்கு சிங்கள மக்களிடையே மலர்ந்துள்ளது. அதனைப் பேரினவாதிகளும், பௌத்த குருமாரும் அறவே விரும்பமாட்டார்கள். சிங்கள மக்களைத் தமது பக்கத்துக்குத் திசை திருப்பவே முயல்வார்கள். தமது நோக்கத்தை அடைவதற்கு அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகளையுமே கருவிகளாகப் பயன்படுத்த முனைவர். அவர்களை எதிர்நீச்சல் அடிப்பதே இரத்நாயக்கா போன்ற அரசியல்வாதிகளுக்கு உள்ள சவாலாகும். நாட்டு நன்மை கருதி துணிச்சலுடன் அவர்கள் செயற்பட்டால் சமாதானமும், அமைதியும் மிக நெருங்கி வந்துவிடும்.

# ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் ஒரேநாளில் நடக்கும்

## சுதந்திரக் கட்சியும் ஆதரவு

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில், சுதந்திரக்கட்சி உட்பட நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிகள் அரசின் இந்த முடிவை அங்கீகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் — தமிழ் அரசியல் கட்சிகள் ஒரே நாளில் இரு தேர்தல்களையும் நடத்துவதை எதிர்த்துள்ளன.

நாடாளுமன்றப் பெரும்பான்மை ஒரு கட்சியிடமும் ஜனாதிபதிப் பதவி இன்னொரு கட்சியிடமும் இருக்க வேண்டும் என்பதை மக்கள் விரும்புவார்களானால், அதற்கு ஏன் சந்தர்ப்பம் கொடுக்கப்படக்கூடாது என்று இத்தமிழ்க் கட்சிகள் கேட்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் 20 ஆம் திகதி முடிவடைகின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஆண்டு பெப்ரவரியில் முடிவடையும்.

அரசமைப்புச் சட்டத்தின்படி — ஜனாதிபதி பதவிக்கான தேர்தல், தற்போதுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் தினத்துக்கு முன்னர் குறைந்தது ஒரு மாதம் முன்பதாக நடத்தப்பட வேண்டும். எப்படியாயினும் பதவிக்காலம் முடிவடையும் திகதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடாது என்றும் அரசமைப்புச் சட்டம் கூறுகின்றது.

இதற்கிணங்க, புதிய ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் 20 ஆம் திகதிக்கும் நவம்பர் 20 ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும்.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் நடத்தப்படும் — என்று சண்டே ரைம்ஸ் வார இதழின் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## ஊரடங்கு நீக்கப்பட்டதும் 'ரபான்' அடித்து மகிழ்ச்சி

கொழும்பு, மார்ச் 29

தென் மாகாணத் தேர்தலை அடுத்து அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு சனிக்கிழமை காலை நீக்கப்பட்டதும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் வீதிகளில் ரபான் அடித்தார்கள்

பட்டாஸ் கொளுத்தியும் —

இனிப்புப்பண்டங்களை வாங்கி ஏனையோருக்கு வழங்கியும் — வெற்றியை அவர்கள் கொண்டாடினார்கள்.

பாதையோரங்களில் பெண்கள் 'ரபான்' அடித்து பாடி மகிழ்ந்தனர். (இ-௭-9)

## தோல்விக்கு தாம் பொறுப்பு அல்ல என்கிறார் றொனி

கொழும்பு, மார்ச், 29

தென்மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த தோல்விக்குத் தாம் பொறுப்பல்லன் என்று முன்னாள் நிதி அமைச்சர் றொனிடிமெல் தெரிவித்திருக்கிறார்.

''செய்யவேண்டிய கருமங்கள் பல உண்டு. அரசியலில் எனக்கு முழு அக்கறை இடையாது''— என்றும் அவர் சொன்னார்.

எமது சொந்த மாவட்டங்களில் பிரசாரம் செய்ய நாம் அனுமதிக்கப்படவில்லை. எனது சொந்தத் தொகுதி தெவிநுவரை. ஆனால் நான் ரத்கம தொகுதியில் பிரசாரம் செய்ய வேண்டியதாயிற்று'' என்று கூறிய றொனி டிமெல்—ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்வி குறித்துத் தாம் ஒன்றும் கூற விரும்பவில்லை என்றார்.

அப்படிக் கூறுவது தம்மை கட்சியில் இருந்து வெளியேற்றுவதை உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் தீர்ப்பை ஐக்கிய தேசியக்கட்சி பணிவுடன் ஏற்கத்தான் வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-௭-9)


### தென் மாகாண வெற்றி:

## எதிரணியினருக்கு தொண்டா பாராட்டு

கொழும்பு, மார்ச் 29

தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியதை இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் பாராட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த தினம் திரு. தொண்டமான் நுவரெலியாவில் தங்கியிருந்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் முகாமையாளராகப் பணிபுரிந்த கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி அநுருத்த ரத்வத்தையுடன் தொண்டமான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்ததுடன், திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை — தென் மாகாணசபைத்தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ளும்படி அமைச்சர் சிறிசேனகூரே விடுத்த வேண்டுகோளை அமைச்சர் தொண்டமான் நிராகரித்துவிட்டார் என்ற தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

''அழைப்பை ஏற்கமுடியாமைக்கு வருந்துகின்றேன். எனது கடிதங்களுக்கு நீங்கள் பதில் அனுப்பவில்லை. மத்திய மாகாண சபையில் இருக்கும் எனது உறுப்பினரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினீர்கள். இ. தொ. காவினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளவருக்கு அமைச்சர் பதவி அளித்தீர்கள். ஆகவே தேர்தல் பிரசாரத்தில் எனக்கு அக்கறையில்லை'' இப்படி தொண்டமான் சிறிசேனகூரேக்கு பதிலளித்தாராம். (இ-௭-9)


## சு. கவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் யார் என்பதை, கட்சியின் வருடாந்த மாநாடு விரைவில் கூடி முடிவு செய்யும்.

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நீங்களா அல்லது சந்திரிகாவா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் இப்படித் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தவுடன், நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட்டு நாடாளுமன்ற ஜனநாயக முறை அரசாங்கம் மீண்டும் அறிமுகம் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார். (இ-9)

## சு. க. உறுப்பினர் கடத்தல்: தோல்விக்கு ஒரு காரணம்

கொழும்பு, மார்ச் 29

முன்னர் மாகாணசபை உறுப்பினராக இருந்த பிரான்சிஸ்குவைக் கடத்திய விவகாரமும் ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்விக்கு ஒரு காரணம்.

சமீபத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொண்ட முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோற்கும் என்பது தமக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தது என்றும் காமினி திஸநாயக்கா கூறினார்.

இத்தேர்தலில் மாத்தறை மாவட்ட எம். பியான உப சபாநாயகர் காமினி பொன்சேகா நல்ல பங்கை வகித்திருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## காமினியின் வருகை பயன் தரவில்லை

### சிறிசேன கூரே கருத்து

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டது தென்மாகாண சபைத் தேர்தலில் கட்சிக்கு உதவவில்லை.

ஐ. தே. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே மேற்கண்டவாறு தெரிவித்தார். [த-௭-9]

## ராணுவத்துக்குமேலும் 10ஆயிரம் பேர்!

### 6ஆம் திகதி முதல் நேர்முகப் பரீட்சை

கொழும்பு, மார்ச் 29

இலங்கை இராணுவத்துக்கு மேலும் 10 ஆயிரம்பேரை சேர்த்துக் கொள்ள பாதுகாப்பு அமைச்சு இராணுவ தலைமையகத்துக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

இந்த 10ஆயிரம் பேருடன் இராணுவத்தின் முழு எண்ணிக்கை ஒரு லட்சமாக அதிகரிக்கும்.

புதியவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் 20க்கு மேற்பட்ட படை முகாம்களில் எதிர்வரும் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

இராணுவத்தில் சேர விரும்புவோர் நேரடியாக முகாம்களுக்கு சென்று நேர்முகப்பரீட்சையில் தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு யுத்தகால அவசர நடவடிக்கை போல் குறுகிய கால அறிவிப்பில் இராணுவப் படைக்கு ஆட்கள் திரட்டப்படவிருப்பதாக இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்தனர். (இ-௭-9)

### கிழக்கில் வீடு வீடாக

## சர்வசன வாக்கெடுப்புக்கு எதிராக துண்டுப்பிரசுரம்

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதைக் கண்டித்து கிழக்கில் வீடுவீடாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்க்குழு ஒன்றே இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றது.

''தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை சிதறடிப்பதில் ஆளும் இனவாத அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் —

சர்வசன வாக்கெடுப்பின் மூலம் சிறுபான்மை சமூகத்தின் அரசியல் உணர்வுகளை அலட்சியப்படுத்தி இனவாதக் கொள்கையை மேலும் திணிப்பதற்கான நடவடிக்கையே இது என்றும் — அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

# ஜெரி சிபார்சு செய்யாத இருவருக்கு பதவி உயர்வு!

## ராணுவத்துக்குள் அதிருப்தி வளர்கிறது

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவினால் சிபார்சு செய்யப்படாத இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு உயர் நிலைப் பதவி உயர்வுகள் அரசியல் தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்டிருப்பது இராணுவ வட்டாரங்களில் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

இதேவேளை — ஓய்வு பெற்ற பின்னர் சேவை நீடிப்பில் இருந்த இராணுவ அதிகாரி ஒருவருக்கு உயர் நிலைப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பது வெட்கக்கேடான சம்பவம் என சண்டே ஐலண்ட் வார இதழில் அதன் விசேட செய்தியாளர் வர்ணித்துள்ளார்.

''எதிர்காலத்துக்கான பாடங்கள்'' என்ற தலைப்பிலான தமது கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஆயுதப்படைகள் மத்தியில் நீண்ட காலமாக ஊழலும் திறமையின்மையும் தான் ஆட்சி நடத்தி வருகின்றன.

உண்மையில் இந்த யுத்தத்தில் வெல்ல விரும்புகின்றோமா? என்ற கேள்வியை நியாயமற்ற பதவி உயர்வுகள் எழுப்பியிருக்கின்றன.

பதவி உயர்வுகள் திறமையின் அடிப்படையில் இல்லாமல் சேவை மூப்பின் அடிப்படையில் எதற்காக வழங்கப்படுகின்றன?

யுத்தத்தில் சாதனை புரிபவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்றால் அவர்கள் முகாம்களிலே தங்கியிருந்து நாட்டை ஆபத்துக்குள்ளாக்குவர். வெற்றிக்கு திறவுகோல் சன்மானம் — யுத்தத்திலும் அது இருக்கிறது.

அடுத்த கேள்வி — பூநகரி ஜானக்புர பகுதிகளில் இராணுவம் அடைந்த பேரழிவுகளுக்குப் பொறுப்பானவர்களை அரசு ஏன் தண்டிக்கவில்லை. இப்பேரழிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகள் வேலை நீக்கஞ் செய்யப்படவில்லை; ராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் இராணுவத்தில் மேலும் பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது குறித்து படையினரின் அபிப்பிராயம் எப்படி இருக்கும்?

இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சுதந்திரக்கட்சியில் உள்ள அனுரா ஆதரவு எம். பிக்கள் மீது விரைவில் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 29

அனுரா ஆதரவு சுதந்திரக்கட்சி எம்பிக்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சுதந்திரக்கட்சி தலைமைப்பீடம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது அனுரா ஆதரவு எம்.பிக்கள், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டங்களை பகிஷ்கரித்து வந்தனர் என்றும்—

வேறு பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு இத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தோற்கும் என்று கூட கூறி வந்தார்கள் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

விரைவில் அவர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (இ-௭-9)

## அன்னை பூபதி நினைவாக நாளை பொது அறிவுத்தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 29

அன்னை பூபதியின் நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஆண்டுதோறும் நடத்தும் பொது அறிவுத் தேர்வு நாளை பிற்பகல் 1 மணிக்கு வடதமிழீழத்தின் நானூறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் தோற்றுவர். யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நடைபெறும் நாள் காலை கோட்டக் கல்வி பணிமனைகளூடாக வழங்கப்படும். தேர்வு அறிவுறுத்தல்களையும், மாணவரின் சுட்டெண் பட்டியலையும் இன்று கல்விக் கோட்டங்களில் பெறலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

## ஓய்வு பெற்ற செயலாளருக்கு பிரிவுபசாரம்

தென்மராட்சி, மார்ச் 29

சாவகச்சேரி நகரசபை செயலாளராக கடமையாற்றி இளைப்பாறிய திரு த. நவரத்தினராசாவுக்கு நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் நடத்தும் பிரிவுபசார விழாவும் சேவைநலம் பாராட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நகரசபை சபா மண்டபத்தில் செயலாளர் இ. நடராசா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் உட்பட சாவகச்சேரி நகர்ப்பகுதியிலுள்ள அரச நிறுவனத் தலைவர்கள் வங்கி முகாமையாளர்கள் கலந்துகொள்வர். (அ-117)

## நினைவு வழிபாடு

இலங்கையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வேதாந்த இயக்கத்தின் தலைவர் தவத்திரு ஸ்ரீமத்பவ்யானந்தாஜி மகாராஜ் 50 ஆண்டுகால ஆன்மீக சேவைக்கும் பின் மகாசமாதியானார். இதை ஒட்டி பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூசை, பஜனை வழிபாடு முதலியன நடைபெறும். (க)

## மூதறிஞர் நினைவஞ்சலி

மூதறிஞர் க. சி. குலரத்தினம் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் பண்டிதர் நா. கந்தையா தலைமையில் நடைபெறும். திரு. எஸ். சிவலிங்கராசா நினைவுப் பேருரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட ஆசிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினர் இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளனர். (க)

## வடக்கில் நடக்கும் இனக்கொலை யுத்தத்தை தெற்கு மக்கள் நிராகரித்தனர்

### வாசுதேவ நாணயக்காரா அறிக்கை

கொழும்பு, மார்ச் 29

வடக்கு-கிழக்கில் அரசு நடத்தும் இனக்கொலை யுத்தத்தை தென்பகுதி மக்கள் நிராகரித்துவிட்டதையே தென்மாகாணசபைத் தேர்தல் முடிவு எடுத்துக்காட்டுகிறது.

நவசமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

உலகவங்கி, சர்வதேச நாணயச்சபை ஆகியவற்றின் உத்தரவுக்கு இணங்க அரசு அமுல் செய்துவரும் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் சமூக நலத்துறை கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்கள் குறைப்புக்கும் எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்பாக இதனை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இத்தேர்தலில் ... தேசிய இனவாதப் பிரசாரம் தெளிவானதாகத் தெரிந்தது.

தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்த கருத்துக்களை சிங்களப் பொதுமக்கள் நிராகரித்துவிட்டனர்.

இப்போது அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தெற்கு, மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் தனது கட்டுப்பாட்டை ... இனியும் ஆட்சியில் நீடிப்பதற்கு ... இழந்துவிட்டது:

அனுரா, காமினி மற்றும் றொனி டிமெல் ஆகியோரைச் சேர்த்துக்கொண்டதன் மூலம் அதிக வாக்குகளைத் திரட்டலாம் என்று அரசு நினைத்தது. ஆனால் அது அரசாங்கத்தையே திருப்பித் தாக்கிவிட்டது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தார்.


வீட்டினைச் சுற்றி தோட்டங்கள் தளைக்க
நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மேற்கு
## மணியர்பதி சிவசுப்பிரமணிய ஆலய
அலங்கார
## உற்சவ விஞ்ஞாபனம்

காலம்: இன்று 29-03-1994 செவ்வாய்க்கிழமை
இடம்: ஆலயமுன்றில்

நிகழ்ச்சிகள்
மாலை 7-00 மணிக்கு மங்கள இசை
நாச்சிமார் கோயில் குகன் குழுவினர்
மாலை 7-30 மணிக்கு விசேட மேளக்கச்சேரி

| தவில் | நாதஸ்வரம் |
|---|---|
| T. உதயசங்கர் | M. பஞ்சாபிகேசன் |
| K. சிவகுமார் | P. நாகேந்திரம் |
| | R. கேதீஸ்வரன் |

இன்னிசை நிகழ்வு
### ராஜன்ஸ் இசைக் குழுவினரின்
### இன்னிசை கானம்

ஒலி அமைப்பு: கண்ணா திருநெல்வேலி
ஒளி அமைப்பு: மனோ கோப்பாய்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.
- மணியர்பதி இந்து இளைஞர்கள்.

(30120)

## வீடு விற்பனைக்கு

உடுப்பிட்டி, சந்தை வீதியில் கடையுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. கீழ்த்தளத்தில் ஒரு அறையும் விசாலமான விறாந்தையும், மேல்மாடியில் இரண்டு அறைகளும் உண்டு.

பார்வையிடுவதற்கும் விபரங்களுக்கும்:

திரு. த. அபூர்வசிங்கம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
அல்லது
திருமதி சே. வசந்தாதேவி
இல: 73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாடு அருகில் — ஒமேகா முன்)

(30124)

## காணவில்லை

முருகேசு கார்த்திகேசு (வயது 60) உயரம் 5' 6'' பொது நிறமும், அளவான உடலமைப்பும் கொண்டவர். கடைசியாக பச்சைக்கோடு கிப்ஸ் சாறமும் வெள்ளை நிறம் கொண்ட சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தோர் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
கா. பாஸ்கரன்
43, 1 ஆம் குறுக்குத்தெரு,
மணிப்புரி, கொழும்புத்துறை;

80/1, சுவாமியார் வீதி,
நச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(30129)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கந்தையா மயில்வாகனம்
(பண்டத்தரிப்பு, அம்பாள் ஸ்டோர்ஸ் உரிமையாளர்)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 26 — 03 — 1936 | 27 — 02 — 1994 |

எங்கள் குடும்பத் தலைவன் பண்டத்தரிப்பு அம்பாள் ஸ்டோர் உரிமையாளர் கந்தையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டி நாளை (29 - 03 - 1994) செவ்வாய்க்கிழமை அன்னாரது சில்லாலை இல்லத்தில் நடைபெறும். தனிப்பட்ட அறிவித்தல் இல்லாதபடியால், வசதிக் குறைவால் மரண வீட்டுக்கு வரமுடியாதவர்களும், அவரது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அந்தியேட்டிக் கிரியைகளில் தவறாது பங்கு பற்றும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மகன்
சிறிஸ்கந்தராசாவும்
மயில்வாகனத்தின்
சகோதரர்களும்

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

[30112]

## பத்திரிகை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் விடுமுறைச் சந்தை கடந்த 27 - 03 - 1994 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடுமுறைச் சந்தை எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு 15 - 04 - 1994 ஆம் திகதிவரை தினச் சந்தையாகவும், பின்னர் விடுமுறைச் சந்தையாகவும் இயங்கவுள்ளது.

இதுவரை விடுமுறைச் சந்தையில் இடம் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 31 - 03 - 1994 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வே. நவரத்தினம்
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-03-1994.

(இ/7683)

## எமது புதிய வெளியீடுகள்

நாசர், ரேவதி
**மகளிர் மட்டும்**
சரத்குமார், சிவரஞ்சினி
**அரண்மனை காவலன்**
சிவகுமார், மந்தாகினி
**சிறகடிக்க ஆசை**

### சுப்பலோ வீடியோ, ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(இ/7678)

## கடை விற்பனைக்கு

யாழ்நகர் கே. கே. எஸ். வீதியில் இலக்கம் 61 இல் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு;

தொடர்புகளுக்கு:

1) பா. தவபாலன்
(சட்டத்தரணி)
2 ஆம் குறுக்குத்தெரு, நல்லூர்;

2) றூபன் கடை
திருநெல்வேலிச் சந்தி.

3) பொ. காங்கேயன்
(சட்டத்தரணி)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,

4) ச. முத்துக்கிருஷ்ணன்
(சட்டத்தரணி)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(30130)

## மக்கள் நலன் காக்கும் பிரிவு
## பயிற்சி வகுப்புக்கள்

தையற்பயிற்சி, தமிழ்/ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன, இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் ஆண் பெண் இருபாலாரும் 10-4-94 திகதிக்கு முன்பதாக அமைப்பின் தலைமையலுவலகத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

மக்கள் நலன் காக்கும் பிரிவு.
தலைமையகம்,
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

(30128)

## மரண அறிவித்தல்கள்

### கணபதி நாகலிங்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாக கொண்டவருமான கணபதி நாகலிங்கம் சனிக்கிழமை (26 03-1994) கொழும்பில் காலமானார்.

இவர் தவமணியின் அன்புக் கணவரும், ரவீந்திரன், ரவிச்சந்திரன், முரளீதரன், சுமதி, மைதிலி ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாவதியின் மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
சி. துரைராஜா
(சகோதரன்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(7045)

### திருமதி தேவகியம்மா பரமநாதன்

காரைநகர் வேம்படியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி ப. தேவகியம்மா கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி அருளம்பலத்தின் அன்புமகளும், வே. பரமநாதனின் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், நீர்பாசனத் திணைக்களம் கிளிநொச்சி) அன்புமனைவியும், ரவிமோகன், மாலினி, ரவிராஜன், ரவிரஞ்சன், சாந்தினி ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
உறவினர்கள்

(30131)

## சேவைநலன் பாராட்டு

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு யாழ். மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் சார்பில், சேவைநலன் பாராட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது. (த-3-163)

வடக்குத்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களும் உள்ளனர்.

புதிய கட்டமைப்பு மாற்றத்தை இராணுவம் அமுலாக்குவதைத் தொடர்ந்து விமானப் படையும் கடற்படையும் தமக்குள் கட்டமைப்புகளின் மாற்றத்தை மேற்கொள்ளும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தில் உள்ள மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரச அங்கீகாரம் அளிக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும் பல கேணல்கள் பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள்.

இம் மாற்றங்களுடன் மேஜர் ஜெனரல்களின் கீழ் புதிய போர் அமைப்புக்களை உருவாக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர். சாத்தியமானால் வட பிராந்தியத்தில் உள்ள குழுப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

வடபகுதியில் பாரிய கூட்டுப்படைத் தாக்குதல் எதனையும் ஆரம்பிப்பதற்கு முன்பாக, மேலதிக காலாட்படை கவசப் படை மற்றும் ஆட்டிலறி பிரிவுகளுடன் இராணுவத்தின் இரண்டாவது டிவிஷனை பலப்படுத்த வேண்டும் என்பதை அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். (உ-எ)

தென்மாகாணத்தில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இத்தகைய செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

வலஸ்முல்ல பகுதியில் எதிரணி ஆதரவாளரான முதாட்டி ஒருவரின் வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த சிலர் அவரின் மூன்று விரல்களை வாளால் வெட்டிச் சென்றனர்.

கட்டுவ பகுதியில் வாக்களிப்பு நிலையப் பிரதிநிதி ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து எதிரணிப் பிரமுகர்கள் பலர் முறையீடு செய்து வருகின்றனர். (உ-எ-5-6)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
## விஞ்ஞான பீடம்

1992/93 கல்வியாண்டிற்கான முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1994 ஏப்ரலில் நடைபெறவுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை 1994-04-10 இற்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

பின்வரும் அலகுகளில் பரீட்சை நடைபெறும்

| | |
|---|---|
| BTG 11, | BTG 12, |
| BG 13, | CHG 11, |
| CG 13, | PHG 11, |
| PG 13, | CSG 11, |
| CSG 12, | ZOG 12, |
| ZOG 11, | ZG 11, |
| MPG 11, | PMG 12, |
| MAG 11, | AMG 13, |
| MSG 11, | MSG 12, |
| STG 11, | BTG 21, |
| BTG 24, | BG 22, |
| CHG 23, | CG 27, |
| PHG 21 | PG 24, |
| CSG 21, | CSG 22, |
| ZOG 21, | ZOG 22, |
| ZG 21, | MPG 22, |
| PMG 22, | MAG 22, |
| AMG 24, | MSG 23, |
| STG 21 | BTG 31, |
| BTG 32, | BG 31, |
| CHG 31, | CG 34, |
| CG 35, | CS 05, |
| PHG 33, | PG 34, |
| CSG 31, | CSG 33, |
| ZOG 31, | ZOG 32, |
| ZG 31, | MPG 33, |
| MPG 32, | PMG 32, |
| MAG 32, | AMG 32, |
| MSG 31, | MSG 33, |
| STG 31. | |

- பதிவாளர்.

[இ-7622]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னையா நாகேஸ்வரி

திருமதி சின்னையா நாகேஸ்வரி 28 - 3 - 94 நேற்று காலை 9.00 மணிக்கு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் வைரமுத்து சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரை செல்லமுத்துவின் ஏகபுத்திரியும், திருமதிகள் தனலெட்சுமி விஜயரெத்தினம், இந்திராதேவி பூபாலசிங்கம் (சுவிஸ்), கனகேஸ்வரி சுப்பிரமணியம், செல்வி நகுலேஸ்வரியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தி. விஜயரெத்தினம், ச. பூபாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற கோ. சுப்பிரமணியம் (இ. போ. ச. யாழ்சாலை) ஆகியோரின் அருமை மாமியாரும், செ. கந்தசாமி (ஜெர்மனி) அன்புச் சகோதரியும், சர்மிளா, சுஜேந்திரன், ஜெயமலா, ஜெகதீஸ்வரன், சுரேந்திரன், வரதராஜன், துஷ்யந்தன் (சுவிஸ்), சரிகா, கீர்த்திகா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாயிநாத், நிரோசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

சமக்கிரியை கொய்யாத்தோட்டம் இல்லத்தில் இன்று (29 - 3 - 94) நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தண்டி மயானத்திற்கு 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
வ. சின்னையா (கணவன்)
திருமதி சுப்பிரமணியம் கனகேஸ்வரி (அழகு)
(மகள்)

17/4 புதிய வீதி,
கொய்யாத்தோட்டம்.

(30133)

### தாமோதரம்பிள்ளை அருளம்பலம்
(நீர்வேலி)

தாமோதரம்பிள்ளை அருளம்பலம் நேற்று மாலை காலமானார் இவர் நீர்வேலி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், பூபதிராஜா (இலங்கை மின்சாரசபை கல்லோயா), காலஞ்சென்ற தருமராஜா, திருமதி இரஞ்சிதமலர், நவரட்ணராஜா (சவூதி), ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற திருமதி கமலாதேவி, வி. நாகரத்தினம், திருமதி ந. விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருலதா, காலஞ்சென்ற அனுசியா, நிரோசிகா இரத்தினரூபன், விஜிதா (வோராளி), மயூரன், நிரஞ்சனா, சுஜன், நிருபன், சர்மிளா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-3-94 பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

தகவல்:-
அ. ஆனந்தராஜா
(மகன்)

நீர்வேலி.
(30135)

### திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியை)

உப்புக்கேணி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம் 28 - 3 - 94 அன்று காலமானார்.

இவர் திரு. செல்லையா கனகலிங்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், திரு. சின்னத்தம்பியின் (இளைப்பாறிய அதிபர், வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அன்பு மகளும், குருபரன் (U.K.), கிரிதரன் (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கிரிதரன்
(மகன்)

உப்புக்கேணி வீதி,
சாவகச்சேரி.

(30137)

### சின்னப்பு குணரத்தினம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு குணரத்தினம் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சு. ராஜேஸ்வரி, ரஞ்சிதா, நவரத்தினராசா (யாழ். போதனா வைத்தியசாலை), நடராசா (ஆசா, அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் [கார்த்தி] (செல்வம் பற்றி சார்ஜ் கே. கே. எஸ். வீதி), கனகராசா (தபாலதிபர், ஆனைக்கோட்டை), திருமதி லோசினி ஆகியோரின் மாமனாரும், சி, முருகேசு (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர், சுதுமலை), திருமதி அன்னம்மா (அச்சுவேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். இறுதிக் கிரியைகள் கொக்குவில் 3 ஆம் கட்டை ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று நண்பகல் 12 00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
கு. நடராசா
(மகன்)

3 ஆம் கட்டை
கொக்குவில்.

[30134]

### வேலுப்பிள்ளை சிங்காரம்
(முன்னாள் பிரபல அரச ஒப்பந்தகாரர்)

காரைநகர் தங்காலையைப் பிறப்பிடமாகவும், தற்போது றெயில்வே றோட் கொக்குவில் கிழக்கில் வசித்து வருமான வேலுப்பிள்ளை சிங்காரம் நேற்று திங்கட்கிழமை காலமானார். அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், சரஸ்வதியின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியத்தின் (மனோ றேடர்ஸ், கொழும்பு) மாமனாரும், வளர்மதி, மலர்விழி, கலைச்செல்வி, மணிவண்ணன், பாலஸ்ரீதரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவசுப்பிரமணியம், சுந்தரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரசரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று 29-3-94 பி. ப. 3 00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பா. சரஸ்வதி
(மகள்)

றெயில்வே வீதி,
கொக்குவில் கிழக்கு.

(30136)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 398/5 இல் [illegible] 29 03 1994 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org